




# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்








மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 196 | உள்ளூர் - 15.07.2026 | புதன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 196 | வெளியூர் - 16.07.2026 | வியாழன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com


**ஆடி மாத ராசி பலன்கள் உங்கள் ராசி எப்படி?**

**புதன்தோறும் கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்!**

**இந்தியா – இங்கிலாந்து வர்த்தக ஒப்பந்தம் அமல்!**

**"AK64"-ஐ தயாரிக்கும் அஜித்?**

## ஹார்முஸ் கட்டண அறிவிப்பை வாபஸ் பெற்ற ட்ரம்ப்!



வாஷிங்டன், ஜூலை. 15–

ஹார்முஸ் ஜலசந்தி வழியாக செல்லும் வணிகக் கப்பல்களுக்கு 20% பாதுகாப்புக் கட்டணம் விதி க்கப்படும் என்ற அறிவிப்பை அமெரிக்க அதிபர் டொனா ல்ட் ட்ரம்ப் ஒரே நாளில் வாபஸ் பெற்றார். இதற்குப் பதிலாக, வளைகுடா நாடுகள் அமெரிக்காவில் பெரிய அளவிலான முதலீடுகள் மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ள ஒப்புக்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

அதே நேரத்தில், ஈரான் துறைமுகங்களுக்கு செல்லும் அல்லது ஈரான் சரக்குகளை ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு மட்டும் கடுமையான கட்டுப்பாடுகள் தொடரும் என்றும் ட்ரம்ப் கூறினார். இதற்கு முன், 20% கட்டணத்தை ஈரான் எதிர்த்ததுடன், ஹார்முஸ் ஜலசந்தியில் அமெரிக்க தலையீட்டை ஏற்க முடியாது என்றும் எச்சரித்திருந்தது.



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய், பெருந்தலைவர் காமராஜர் 124–ஆவது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை, அண்ணா சாலை, பல்லவன் இல்லம் எதிரில் வைக்கப்பட்டிருந்த பெருந்தலைவர் காமராஜரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில், சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர், ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் என்.ஆனந்த், பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் கோ.க. அருண்ராஜ், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் ப.வெங்கடரமணன், பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ராஜ்மோகன், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஏ.எம். ஷாஜகான், நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் நெ.மரிய வில்சன், செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் ரா.குமார், மாநிலங்களவை உறுப்பினர் பிரவீன் சக்கரவர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.அ.அருண் தம்புராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## "லஞ்சப் புகாருக்கு வாட்ஸ் அப் எண்: விஜய் அரசு அதிரடி!"

சென்னை, ஜூலை. 15–

லஞ்சம், ஊழல் ஒழிப்பு உள்ளிட்டவற்றை பிரதான வாக்குறுதியாக தந்து தான் விஜய் அரசு பெரும்பாலான மக்களின் வாக்குகளை பெற்றது. அந்த வகையில் அண்மையில் கரூர் நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர் விஜய் அதிகாரிகள் லஞ்சம் கேட்டால் கொடுக்க முடியாது, இது எங்கள் விஜய் அரசு என தைரியமாக கூறுங்கள் என தெரிவித்திருந்தார். இந்நிலையில் தமிழக அரசு , பொதுமக்கள் எளிதாக லஞ்ச புகார்களை அளிக்கும் வகையில் வாட்ஸ் அப் எண்ணை அறிவித்துள்ளது. தமிழகத்தில் அரசு ஊழியர்கள், அதிகாரிகள் யாராவது லஞ்சம் கேட்டால், பொதுமக்கள் உடனடியாக இந்த வாட்ஸ் அப் எண்ணில் புகார் தெரிவிக்கலாம் என அரசு அறிவித்துள்ளது. எனவே பொதுமக்கள் லஞ்சம் கேட்கும் அரசு ஊழியர்கள் குறித்து 9498180936 என்ற



எண்ணிற்கு வாட்ஸ்அப் மூலம் புகார் அனுப்பலாம். அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில், லஞ்ச ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பலகைகளைத் தெளிவாக வைக்குமாறு அரசு துறை தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு தலைமை செயலாளர் எம். சாய் குமார் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

"லஞ்சம் கொடுப்பதும், வாங்குவதும் குற்றம்" என்ற வாசகம் அடங்கிய பலகைகளை அனைத்து அரசு அலுவலகங்களிலும் கட்டாயம் வைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்பும் இத்தகைய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தாலும், பல அலுவலகங்களில் இவை முறையாகப் பின்பற்றப்படவில்லை. எனவே, இந்த முறை இதை சரியாக செயல்படுத்தி, அது குறித்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று துறை தலைவர்களுக்கு தமிழக அரசு சார்பில் உத்தரவிடப்பட்டுள்ளது.

9498180936 என்ற வாட்ஸ்அப் எண், லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் (DVAC) இணையதள முகவரி ஆகியவை அனைத்து அரசு அலுவலக இணை யதளங்களிலும் இடம்பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சில அதிகாரிகள் இன்னும் பழைய முறையிலேயே செயல்படுவதைக் கண்டு முதலமைச்சர் விஜய் அதிருப்தி அடைந்திருப்பதாகவும் இதன் காரணமாகவே லஞ்சம் புகார் தொடர்பாக நடவடிக்கைகள் தீவிரமடைந்திருப்பதாகவும் அதிகாரிகள் அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளனர்.

லஞ்ச ஒழிப்பு தொடர்பான அரசின் உத்தரவு முறையாக பின்பற்றப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்த, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் உள்ள ஆய்வு பிரிவுகள் மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் அனைத்து அரசு அலுவலகங்களிலும் திடீர் ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு அந்த சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## அண்ணா பல்கலைக்கழக PhD மாணவர் சேர்க்கைக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்!

சென்னை, ஜூலை. 15–

அண்ணா பல்கலைக்கழகத்தின் தற்போதைய (2026 27) கல்வியாண்டுக்கான PhD (முனைவர் பட்ட) மாணவர் சேர்க்கை நடை முறைக்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையை மதுரை உயர்நீதிமன்றக் கிளை நீக்கியுள்ளது.

இதன் மூலம் மாணவர் சேர்க்கை நடவடிக்கைகள் மீண்டும் தொடங்க வழி ஏற்பட்டுள்ளது.

அண்ணா பல்கலைக்கழகத்தின் உறுப்பு கல்லூரி களில் பணியாற்றி வந்த தற்காலிக பேராசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் இந்த இடைக்கால தடை முன்பு விதிக்கப்பட்டது.

## ரஷ்யாவை முற்றுகையிடும் அமெரிக்கா!

# "கிரஹாம் ரஷ்யா பொறுப்புக்கூறு மசோதா" தாக்கல்

# ரஷ்ய எண்ணெய் வாங்கினால் சுங்கவரி

## இந்தியாவுக்கும் தாக்கம்?




வாஷிங்டன், ஜூலை 15–

ரஷ்யா மீது மேலும் கடுமையான பொருளாதார தடைகளை விதிக்கும் புதிய மசோதா அமெரிக்க செனட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இரு கட்சிகளைச் சேர்ந்த செனட்டர்கள் இணைந்து தாக்கல் செய்துள்ள இந்த சட்ட முன்வடிவு, ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகளுக்கு கூடுதல் சுங்கவரி விதிக்கும் அதிகாரத்தை அமெரிக்க அரசுக்கு வழங்குகிறது. இந்த நடவடிக்கையால் இந்தியா, சீனா, ஹங்கேரி, ஸ்லோவாகியா மற்றும் அஜர்பைஜான் உள்ளிட்ட நாடுகள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

"லிண்ட்சே கிரஹாம் ரஷ்யா பொறுப்புக்கூறு மசோதா" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த சட்ட முன்வடிவு, மறைந்த அமெரிக்க செனட்டர் லிண்ட்சே கிரஹாமின் முயற்சிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கொண்டு வரப்பட்டுள்ளது. ரஷ்யாவின் எரிசக்தி, நிதி, பாதுகாப்புத் துறைகள், முக்கிய தொழிலதிபர்கள் மற்றும் அதிபர் விளாடிமிர் புதின் வரை கடுமையான பொருளாதார தடைகள் விதிக்கவும் இந்த மசோதா வழிவகுக்கிறது.

மேலும், ரஷ்ய இயற்கை எரிவாயுவை அதிகளவில் இறக்குமதி செய்யும் நாடுகளையும் இந்த மசோதா குறிவைக்கிறது. இருப்பினும், ரஷ்யாவிடம் இருந்து 15 சதவீதத்திற்கும் குறைவாக எரிவாயு வாங்கும் நாடுகளுக்கு சில விலக்குகள் வழங்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சுங்கவரி எவ்வளவு என்பது பின்னர் அமெரிக்க வர்த்தக பிரதிநிதியால் தீர்மானிக்கப்படும்.

2022–ம் ஆண்டு முதல் தள்ளுபடி விலையில் ரஷ்ய கச்சா எண்ணெயை இந்தியா அதிகளவில் இறக்குமதி செய்து வருகிறது. நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு, பொதுமக்களுக்கு மலிவான எரிபொருள் கிடைப்பது மற்றும் உலகளாவிய எண்ணெய் விலை நிலைத்தன்மையை கருத்தில் கொண்டே இந்த கொள்முதல் தொடர்கிறது என்று இந்தியா தொடர்ந்து விளக்கம் அளித்து வருகிறது. மேற்கத்திய நாடுகளின் அழுத்தம் இருந்தபோதிலும், தனது தேசிய நலனே முதன்மை என்ற நிலைப்பாட்டை இந்தியா கடைப்பிடித்து வருகிறது.

இதற்கிடையில், இந்த மசோதாவுக்கு டிரம்ப் நிர்வாகமும் ஆதரவு தெரிவித்துள்ளதாக அமெரிக்க வட்டாரங்கள் கூறுகின்றன. ஆகஸ்ட் இறுதிக்குள் அமெரிக்க காங்கிரஸில் இந்த மசோதா குறித்து முக்கிய முடிவு எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மசோதா நிறைவேற்றப்பட்டால், இந்தியா அமெரிக்கா வர்த்தக உறவுகள், கச்சா எண்ணெய் இறக்குமதி செலவு மற்றும் சர்வதேச எரிசக்தி சந்தையில் புதிய மாற்றங்கள் ஏற்படும் வாய்ப்பு இருப்பதாக பொருளாதார நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர்.

## தீவிரமடையும் தென்மேற்கு பருவமழை...!



டெல்லி, ஜூலை 15–

வடக்கு ஒடிசாமேற்கு வங்க கடற்கரையருகே வங்கக் கடலின் வடக்குப் பகுதியில் புதிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) தெரிவித்துள்ளது. இது மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து ஒடிசா மற்றும் கங்கை சமவெளிப் பகுதிகளை நோக்கிச் செல்லும் என கணிக்கப்பட்டுள்ளது.

இதன் தாக்கத்தால் மேற்கு வங்கம், ஒடிசா மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அடுத்த சில நாட்களுக்கு கனமழை முதல் மிகக் கனமழை வரை பெய்ய வாய்ப்புள்ளது. மேலும், அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் ஜூலை 18 வரை கடலுக்குச் செல்ல வேண்டாம் என வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## அமில வீச்சில் பாதிக்கப்பட்டோருக்கு சட்டத் திருத்தம்? உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல்!




புதுடெல்லி, ஜூலை 15–

அமில (Acid) வீச்சால் பாதிக்கப்படுபவர்களின் பாதுகாப்பு, இழப்பீடு மற்றும் மறுவாழ்வு வசதிகளை மேலும் வலுப்படு த்தும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளும் விவகாரம் பரிசீலனை யில் இருப்பதாக மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. இந்த வழக்கு விசாரணையின் போது, பாதிக்கப்பட்டோருக்கு உடனடி மருத்துவ சிகிச்சை, போதுமான இழப்பீடு, நீண்ட கால மறுவாழ்வு உதவி மற்றும் மனநல ஆலோசனை உள்ளிட்ட அனைத்து ஆதரவுகளும் தாமதமின்றி கிடைக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியது. மேலும், அமில விற்பனையை கட்டுப்படுத்தும் தற்போதைய விதிமுறைகளை கடுமையாக அமல்படுத்த வேண்டிய அவசியத்தையும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

இதற்கு பதிலளித்த மத்திய அரசு, அமில வீச்சு தொடர்பான தற்போதைய சட்டங்கள் மற்றும் நிவாரண நடைமுறைகள் குறித்து ஆய்வு நடைபெற்று வருவதாக தெரிவித்தது. சம்பந்தப்பட்ட அமைச்சகங்களுடன் ஆலோசனை நடத்தி தேவையான திருத்தங்களை மேற்கொள்வது குறித்து பரிசீலித்து வருவதாகவும் கூறியது.

அமில வீச்சு சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் முழுமையாக பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசும் உறுதியாக இருப்பதாக தெரிவித்துள்ளது. இந்த வழக்கு தொடர்பான அடுத்த கட்ட விசாரணையில் சட்டத் திருத்தம் குறித்து விரிவான நிலைப்பாட்டை தாக்கல் செய்யுமாறு மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

இதன் மூலம் அமில வீச்சு பாதிப்புக்குள்ளானவர்களுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பும், மறுவாழ்வு உதவிகளும் மேலும் வலுப்பெறும் என்ற எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.




# மதுரை மணி

புதன்கிழமை 15.07.2026

விசுவாவசு தமிழ் வருடம்

ஆனி மாதம் 31-ம் தேதி




அமெரிக்கா-ஈரான் இடையேயான பதற்றம், உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற நிலை, பணவீக்கம் மற்றும் புவிசார் அரசியல் சூழல் ஆகியவை தங்கத்தின் மீது முதலீட்டாளர்களின் கவனத்தை மீண்டும் திருப்பியுள்ளன. சமீப நாட்களில் தங்கம் விலை சற்று சரிந்திருந்தாலும், இது தற்காலிகம் மட்டுமே என்றும், பெரிய அளவில் மேலும் சரிவதற்கான வாய்ப்பு குறைவாக இருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது 10 கிராம் 22 கேரட் தங்கம் ரூ.1.31 லட்சத்துக்கும், 24 கேரட் தங்கம் ரூ.1.43 லட்சத்துக்கும் விற்பனையாகி வருகிறது. இந்த விலைச் சரிவு காரணமாக நகை வாங்குபவர்களின் ஆர்வமும் அதிகரித்துள்ளது. ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் பண்டிகைக் காலம் தொடங்குவதும், நவம்பரில் தீபாவளி வருவதும் தங்கத்தின் தேவையை மேலும் உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சந்தை ஆய்வாளர்களின் கணிப்பின்படி, புவிசார் அரசியல் பதற்றம் குறைந்தால், தீபாவளிக்குள் 10 கிராம் 24 கேரட் தங்கத்தின் விலை ரூ.1.60 லட்சத்தை எட்டும் வாய்ப்பு உள்ளது. அதாவது தற்போதைய விலையை விட சுமார் ரூ.20,000வரை உயரலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், சர்வதேச சூழல் மற்றும் சந்தை மாற்றங்களைப் பொறுத்து விலையில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படலாம்.

# த.வெ.க. அரசின் முதல் பட்ஜெட் முத்தான பட்ஜெட்டாக இருக்குமா?



சென்னை, ஜூலை. 15–

2026–27–ம் ஆண்டுக்கான பொது பட்ஜெட் மற்றும் வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்காக தமிழக சட்டசபை மீண்டும் கூட இருக்கிறது.

அனேகமாக, இம்மாத இறுதியில், அதாவது ஜூலை 28–ந் தேதியோ, அல்லது அடுத்த மாதம் தொடக்கத்தில், அதாவது ஆகஸ்டு 3–ந் தேதியோ சட்டசபை கூட்டம் தொட ங்கும் என்று எதிர்பார்க்க ப்படுகிறது.

**மானியக் கோரிக்கை விவாதம்**

முதல் நாளில், 2026–27–ம் ஆண்டுக்கான பொது பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது. நிதி அமைச்சர் மரிய வில்சன் பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள அம்சங்களை பட்டியலிட்டு பேசுவார். அடுத்த நாள், 2026–27–ம் ஆண்டுக்கான வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட இருக்கிறது. வேளாண் துறை அமைச்சர் வினோத், இந்த பட்ஜெட்டை தாக்கல் செய்வார்.

தொடர்ந்து, பட்ஜெட் மீதான விவாதமும், அமைச்சர்களின் பதிலுரையும் இடம்பெறும். அதன்பின்னர், துறை வாரியாக மானியக் கோரிக்கை விவாதம் நடைபெறும். மொத்தத்தில், இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் சுமார் 1½ மாதங்கள் நடைபெறும் என்று தெரிகிறது.

**முக்கிய அறிவிப்புகள் இடம்பெறுமா?**

தமிழகத்தில் புதிதாக ஆட்சி பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசின் முதல் பட்ஜெட் இது என்பதால், தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகளில் பல்வேறு அறிவிப்புகள் இதில் இடம்பெறும் என்று தெரிகிறது.

த.வெ.க. தேர்தல் அறிக்கையில், "குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.2,500 வழங்கப்படும். ஆண்டுக்கு 6 இலவச எல்.பி.ஜி. சிலிண்டர்கள் கொடுக்கப்படும். திருமணத்திற்கு 1 சவரன் தங்கம் மற்றும் பட்டுச்சேலை வழங்கப்படும். ரூ.20 லட்சம் வரை கல்விக்கடன் வழங்கப்படும். குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் மருத்துவ காப்பீடு வழங்கப்படும். ஆண்டுதோறும் இலவச முழு உடல் பரிசோதனை மேற்கொள்ளப்படும். வேலையில்லா பட்டதாரிகளுக்கு மாதந்தோறும் ரூ.4 ஆயிரம் வழங்கப்படும்" என்பது உள்பட பல்வேறு அறிவிப்புகள் இடம் பெற்றிருந்தன.

**தங்க மோதிரம் திட்டம்**


ஏற்கனவே, த.வெ.க. தேர்தல் அறிக்கையில் இடம்பெற்ற, பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் திட்டம் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15–ந் தேதி தொடங்கப்படும் என்று முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் அறிவித்துள்ளார்.

இதேபோல், தேர்தல் வாக்குறுதிகளில் இடம்பெற்ற 200 யூனிட் மின்சாரம் ஒரு மாதம் வழங்கப்பட்டுள்ளது. ரூ.75 ஆயிரம் வரையிலான பயிர் கடனும் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அறிவிப்புகளில் முக்கியமானவை பட்ஜெட்டில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**முத்தான பட்ஜெட்டாக இருக்குமா?**

குறிப்பாக, மகளிர் உரிமைத்தொகை ரூ.2,500 ஆக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பை பெண்கள் ஆர்வத்துடன் எதிர்நோக்கியுள்ளனர். என்றாலும், த.வெ.க. அரசின் முதல் பட்ஜெட் முத்தான பட்ஜெட்டாக இருக்குமா? என்பது சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட பிறகே தெரியவரும்.

# 2031க்குள் 20 ஆயிரம் மின்சார வாகன சார்ஜிங் நிலையங்கள் அமைக்க தமிழ்நாடு அரசு முடிவு!



சென்னை, ஜூலை. 15–


தமிழ்நாடு அரசு 2031ஆம் ஆண்டிற்குள் 20,000 பொது மின்சார வாகன சார்ஜிங் நிலையங்களை அமைக்க இலக்கு நிர்ணயித்துள்ளது. தமிழ்நாட்டில் இருக்கும் மின்சார வாகன சார்ஜிங் நிலையங்களின் தற்போதைய நிலை குறித்த ஆலோசனைக் கூட்டம் நேற்று தலைமை செயலகத்தில், தலைமைச் செயலாளர் சாய்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதனைத்தொடர்ந்து தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தலைமையில் ITDP இந்தியா மற்றும் வழிகாட்டி தமிழ்நாடு அமைப்புகளுடன் இன்று உயர்மட்ட தொழில்நுட்பக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுசூழல் மாசை குறைக்க மாநிலத்தில் மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிக்கவும், அதற்கான உள்கட்டமைப்பை வலுப்படுத்தவும், இதன்மூலம் தனியார் முதலீட்டை ஊக்குவிக்கவும் அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அதன் ஒருபகுதியாக இந்த முடிவு வந்துள்ளது.

# மிஸ் பண்ணிடாதீங்க! கூடுதல் டோக்கன்களுடன் இயங்கும் பத்திரப்பதிவு அலுவலகங்கள்!




சென்னை, ஜூலை. 15–

தற்போது ஆடி மாதம் தொடங்க இருப்பதை முன்னிட்டு நடப்பு (ஆனி) மாதத்தின் கடைசி நாளில் அதிகளவில் பத்திரப்பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு டோக்கன்கள் ஒதுக்கீடு செய்யுமாறு பல்வேறு தரப்பு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

எனவே, நாளை ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100–க்கு பதிலாக 150 முன்பதிவு டோக்கன்களும், இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200–க்கு பதிலாக 300 முன்பதிவு டோக்கன்களும், அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100–க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு டோக்கன்களோடு ஏற்கனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு டோக்கன்களோடு கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு டோக்கன்களும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் ஆடி மாதத் தொடக்கத்தையொட்டி ஆவணப் பதிவு செய்யக் காத்திருக்கும் பொதுமக்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வார விடுமுறையை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 1,215 சிறப்பு பஸ்கள் இயக்கம்!



சென்னை, ஜூலை. 15–

வார விடுமுறை நாட்களை முன்னிட்டு, சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 17–ந் தேதி (வெள்ளிக்கிழமை) அன்று 395 பஸ்களும், 18–ந் தேதி (சனிக்கிழமை) 330 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 17–ந் தேதி வெள்ளிக்கிழமை 120 பஸ்களும், 18–ந் தேதி சனிக்கிழமை 120 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கு 200 சிறப்பு பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# IRCTC புது இணையதளம் - இனி முன்பதிவு ரொம்ப ஈஸி!




புதுடெல்லி, ஜூலை. 15–

தற்போது ஒரு நிமிடத்திற்கு 32,000 டிக்கெட்டுகள் மட்டுமே பதிவு செய்ய முடியும் என்ற நிலை உள்ளது. புதிய தளம் மூலம் இனி ஒரு நிமிடத்திற்கு 1.5 லட்சம் டிக்கெட்டுகளை கையாளும் வகையில் 5 மடங்கு திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிமிடத்திற்கு 4 லட்சம் டிக்கெட் நிலவரம் குறித்த Enquiry–களை மட்டுமே தளம் தாங்கும். இனி ஒரே நேரத்தில் 40 லட்சம் Enquiry–களை இணையதளம் எந்தவித தொய்வுமின்றி உடனுக்குடன் வழங்கும்.

விளம்பரங்கள் மற்றும் தேவையற்ற பாப் அப்கள், கிராபிக்ஸ் பக்கங்கள் இல்லாமல் புதிய இணையதளம் மிகவும் எளிமையாக மாற்றப்பட்டுள்ளது. பயணிகள் வெவ்வேறு தேதிகளுக்கான டிக்கெட் கட்டணங்களை ஒரே இடத்தில் ஒப்பிட்டுப் பார்த்து தங்களுக்கு சாதகமான தேதியைத் தேர்வு செய்யலாம்.

ரெயிலின் அனைத்து வகுப்புகளுக்கான இருக்கை இருப்பு விபரங்களையும் தனித்தனியாகத் தேடாமல், Single Screen–இல் பார்த்துக் கொள்ளலாம்.


பயணிகள் தங்களுக்கு விருப்பமான இருக்கை அல்லது படுக்கை வசதியை எளிதாகத் தேர்வு செய்யும் வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது. புதிய தளத்தில் மாற்றுத்திறனாளிகள், மாணவர்கள் மற்றும் நோயாளிகளுக்கான சிறப்புச் சலுகை அடிப்படையிலான சேவைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், பல இந்திய மொழிகளில் இந்தத் தளத்தைப் பயன்படுத்தும் வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

# ஸ்பெயின் அபாரம்! ஃப்ரான்ஸை 2–0 என வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்!




ஃபிஃபா உலகக்கோப்பை 2026 அரையிறுதிப் போட்டியில் ஸ்பெயின் அணி, ஃப்ரான்ஸை 2–0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. 22–வது நிமிடத்தில் ஓயர்சபல் பெனால்டி வாய்ப்பை கோலாக மாற்றி முன்னிலை கொடுத்தார். தொடர்ந்து 58–வது நிமிடத்தில் பெட்ரோ பேரோ இரண்டாவது கோலை அடித்தார். ஃப்ரான்ஸ் பலமுறை தாக்குதல் நடத்தியபோதும், ஸ்பெயின் அணியின் வலுவான தற்காப்பால் கோல் அடிக்க முடியவில்லை. இதன்மூலம் ஸ்பெயின் உலகக்கோப்பை இறுதிப்போட்டிக்கான டிக்கெட்டை உறுதி செய்தது. மற்றொரு அரையிறுதியில் அர்ஜென்டினா இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன.



# சினிமா துளிகள்..!

## உலக சினிமாவில் மைக்கேல் ஜாக்சன் பயோபிக் புதிய வசூல் சாதனை!




மறைந்த பாப் இசை ஜாம்பவான் மைக்கேல் ஜாக்சனின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு உருவான ‘மைக்கேல்’ திரைப்படம், உலகம் முழுவதும் ரூ.10,000 கோடிக்கும் மேல் வசூலித்து, அதிக வசூல் செய்த முதல் பயோபிக் படம் என்ற வரலாற்றுச் சாதனையை படைத்துள்ளது.

அன்டோன் ஃபுகுவா இயக்கிய இப்படத்தில், மைக்கேல் ஜாக்சனின் அண்ணன் மகன் ஜாஃபர் ஜாக்சன் கதாநாயகனாக நடித்துள்ளார். இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் படம் மாபெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

## AK64-ஐ தயாரிக்கும் அஜித்? ஆகஸ்டில் படப்பிடிப்பு தொடக்கம்!




நடிகர் அஜித் குமார், ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கும் AK64 படத்தை தானே தயாரித்து நடிக்க முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

படத்தின் படப்பிடிப்பு ஆகஸ்ட் மாதம் தொடங்கும் என்றும், இந்த மாத இறுதியில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என்றும் கூறப்படுகிறது. படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார்.

AK64 கைவிடப்பட்டது என்ற வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இந்த தகவல் வெளியாகி, அஜித் ரசிகர்களை உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது.



# ஆடி மாத ராசி பலன்கள் 2026 | “உங்கள் ராசிக்கு எப்படி இருக்கு?”




ஆடி மாதம் (ஜூலை 17 முதல் ஆகஸ்ட் நடுப்பகுதி வரை) அம்மனுக்கு உகந்த மாதமாக கருதப்படுகிறது. இந்த காலத்தில் சூரியன் கடக ராசியில் சஞ்சரிப்பதாலும், குரு, சனி, செவ்வாய் உள்ளிட்ட கிரகங்களின் நிலை மாற்றங்களாலும் ஒவ்வொரு ராசிக்கும் பலன்களில் மாற்றங்கள் ஏற்படும் என ஜோதிடர்கள் தெரிவிக்கின்றனர்.

**12 ராசிகளுக்கான சுருக்கப் பலன்கள்:**

**மேஷம்:** தொழில் முன்னேற்றம், புதிய வாய்ப்புகள், குடும்பத்தில் மகிழ்ச்சி, செலவுகள் கட்டுப்படுத்தினால் லாபம் அதிகரிக்கும்.

**ரிஷபம்:** பணவரவு உயரும், சொத்து தொடர்பான முயற்சிகளில் சாதகமான பலன், உடல்நலத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** புதிய வேலை வாய்ப்புகள், பயண யோகம், குடும்ப ஒற்றுமை மேம்படும்.

**கடகம்:** சூரியன் ராசியில் இருப்பதால் தன்னம்பிக்கை உயரும், பதவி உயர்வு அல்லது புதிய பொறுப்புகள் கிடைக்கலாம்.

**சிம்மம்:** வருமானம் அதிகரிக்கும் வாய்ப்பு, முதலீடுகளில் கவனம் அவசியம், உடல்நலத்தை அலட்சியம் செய்ய வேண்டாம்.

**கன்னி:** கல்வி, போட்டித் தேர்வுகளில் வெற்றி, குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறலாம்.

**துலாம்:** தொழிலில் முன்னேற்றம், புதிய ஒப்பந்தங்கள், செலவுகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

**விருச்சிகம்:** நீண்ட நாள் முயற்சிகளுக்கு வெற்றி, வெளிநாட்டு வாய்ப்புகள் உருவாகலாம்.

**தனுசு:** பணவரவு சீராக இருக்கும், குடும்ப உறவுகள் வலுப்படும், ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும்.

**மகரம்:** தொழில் வளர்ச்சி, புதிய முதலீடுகளில் லாபம், தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் வெற்றி, நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், உடற்பயிற்சியில் கவனம் செலுத்த வேண்டும்.

**மீனம்:** குடும்ப மகிழ்ச்சி, பணவரவு மேம்பாடு, திருமண மற்றும் சுபகாரிய யோகம் உருவாகும்.

ஜோதிட நம்பிக்கையின்படி, ஆடி மாதத்தில் அம்மன் வழிபாடு, வெள்ளி மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் விரதம், துர்க்கை மற்றும் மாரியம்மன் கோவில்களில் வழிபாடு மேற்கொள்வது மனநிம்மதியையும் நன்மைகளையும் தரும் என கூறப்படுகிறது.

**குறிப்பு:** ராசி பலன்கள் ஜோதிடக் கணிப்புகளின் அடிப்படையில் வழங்கப்படுபவை. அவற்றை தனிப்பட்ட வாழ்க்கை முடிவுகளுக்கான உறுதியான கணிப்பாக அல்லாமல், நம்பிக்கை சார்ந்த பொதுத் தகவலாகவே எடுத்துக்கொள்ள வேண்டும்.

# சற்றே உயர்ந்த தங்கம் விலை!



சென்னை, ஜூலை. 15–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.240 உயர்ந்து ரூ.1,05,440–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.30 உயர்ந்து ரூ.13,180–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை போன்று வெள்ளி விலையும் உயர்ந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.240–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



# உங்ககிட்ட இந்த அறிகுறிகள் தெரியுதா? உஷார்..!



நமது உடலில் இன்சுலின் என்பது மிகவும் முக்கியமான ஹார்மோன். இது கணையம் (Pancreas) மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. நாம் சாப்பிடும் உணவில் இருந்து கிடைக்கும் குளுக்கோஸை உடலின் ஒவ்வொரு செல்லுக்கும் கொண்டு சென்று, அதை ஆற்றலாக மாற்றும் பணியை இன்சுலின் செய்கிறது. இதன் மூலம் இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு கட்டுப்பாட்டில் இருக்கும். ஆனால் தசைகள், கொழுப்பு திசுக்கள் மற்றும் கல்லீரல் செல்கள் இன்சுலினுக்கு சரியாக பதிலளிக்காத நிலையே இன்சுலின் எதிர்ப்பு (Insulin Resistance) எனப்படுகிறது. இந்த நிலை நீண்ட நாட்கள் கவனிக்கப்படாமல் இருந்தால், டைப்–2 சர்க்கரை நோய், இதய நோய், கொழுப்பு கல்லீரல் உள்ளிட்ட பல்வேறு உடல்நலப் பிரச்சனைகள் ஏற்படும் அபாயம் அதிகரிக்கும்.

இன்சுலின் எதிர்ப்பை ஆரம்பத்திலேயே கண்டறிவது மிகவும் முக்கியம். இதற்கான முக்கிய அறிகுறிகள்: வயிற்றுப் பகுதியில் தொடர்ந்து எடை அதிகரித்தல், கழுத்து, அக்குள், இடுப்பு போன்ற பகுதிகளில் கருமையான தோல் திட்டுகள் தோன்றுதல், திடீரென தோலில் மருக்கள் அதிகரித்தல், போதுமான தூக்கத்திற்குப் பிறகும் உடல் சோர்வாக இருப்பது, முகம் வீங்கியிருப்பது அல்லது உப்பிய தோற்றம் காணப்படுவது, சாப்பிட்ட உடனேயே மீண்டும் பசி எடுப்பது, இனிப்பு மற்றும் மாவுச்சத்து நிறைந்த உணவுகளை அதிகம் விரும்புவது, சாப்பிட்ட சிறிது நேரத்திலேயே ஆற்றல் குறைவது, கவனம் மற்றும் நினைவாற்றல் குறைவது, இரத்தப் பரிசோதனையில் ட்ரைகிளிசரைடுகள் மற்றும் ஃபாஸ்டிங் சர்க்கரை அளவு அதிகமாகவும், நல்ல கொலஸ்ட்ரால் (HDL) குறைவாகவும் இருப்பது போன்றவை. இவற்றில் இரண்டு அல்லது மூன்று அறிகுறிகள் இருந்தாலும் மருத்துவரை அணுகி பரிசோதனை செய்வது நல்லது.

இந்த பிரச்சனையை கட்டுப்படுத்த வாழ்க்கை முறை மற்றும் உணவுமுறையில் மாற்றம் அவசியம். ஒவ்வொரு வேளை உணவிலும் மாவுச்சத்தை குறைத்து, புரோட்டீன் மற்றும் நார்ச்சத்து அதிகமுள்ள உணவுகளை சேர்க்க வேண்டும். உணவை அளவோடு சாப்பிட வேண்டும். எந்த வேளை உணவையும் தவிர்க்கக்கூடாது. சர்க்கரை கலந்த பானங்கள், ஜங்க் உணவுகள் மற்றும் வெளி உணவுகளை முடிந்தவரை தவிர்ப்பது நல்லது.

அதேபோல், வாரத்திற்கு 3 முதல் 4 முறை வலிமைப் பயிற்சி மேற்கொள்வதும், தினமும் குறைந்தது 30 நிமிடங்கள் நடைப்பயிற்சி செய்வதும் இன்சுலின் செயல்திறனை மேம்படுத்தும். ஒவ்வொரு வேளை உணவுக்குப் பிறகும் 10 நிமிடங்கள் நடைப்பயிற்சி மேற்கொள்வது இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த உதவும். தினமும் போதுமான ஆழ்ந்த உறக்கம் பெறுவது, மனஅழுத்தத்தை குறைப்பது மற்றும் சீரான உடற்பயிற்சியை கடைபிடிப்பதும் இன்சுலின் எதிர்ப்பைத் தடுக்க முக்கிய பங்காற்றுகின்றன.

(**குறிப்பு:** இந்த அறிகுறிகள் இருப்பதாக சந்தேகம் ஏற்பட்டால், சுயமாக முடிவு எடுக்காமல் மருத்துவரை அணுகி தேவையான பரிசோதனைகள் செய்து ஆலோசனை பெறுவது மிகவும் அவசியம். இந்த தகவல்கள் பொதுவான விழிப்புணர்வுக்காக மட்டுமே வழங்கப்படுகின்றன.)

# தூய்மை பணியாளர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்ச்சி!



நாட்றம்பள்ளி, ஜூலை. 15–

திருப்பத்தூர் மாவட்டம் நாட்டறம்பள்ளி பேரூராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வு நாட்டறம்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலர் ரவிசங்கர் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக மாவட்ட ஊராட்சி குழு தலைவரும் ( மாவட்ட சேர்மன் ) நாட்டறம்பள்ளி மேற்கு ஒன்றிய கழக செயலாருமான NKR. சூரியகுமார் BA, Ex. MLA அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்து சிறப்பாக பணியாற்றும் தூய்மை பணியாளர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார். உடன் அலுவலர்கள் தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# சிபிஎஸ்இ புதிய அறிவிப்பு!




புதுடெல்லி, ஜூலை. 15–

தேசிய கல்விக் கொள்கையின் (NEP) மும்மொழி கொள்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தும் நோக்கில், 202728 கல்வியாண்டு முதல் CBSE பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு புதிய விதிமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 10–ம் வகுப்பு தேர்ச்சி சான்றிதழ் பெற மூன்றாவது மொழி உள்நிலைத் தேர்வில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்றாவது மொழி, 10–ம் வகுப்பு பொதுத்தேர்வில் இடம்பெறாது. அதற்கு பதிலாக, சம்பந்தப்பட்ட பள்ளிகளிலேயே உள்நிலைத் தேர்வு நடத்தப்படும். அந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்றால்தான் மாணவர்களுக்கு 10–ம் வகுப்பு தேர்ச்சி சான்றிதழ் வழங்கப்படும். முதல் முயற்சியில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு, பொதுத்தேர்வு முடிவுகள் வெளியாகும் முன் மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்க பள்ளிகளுக்கு CBSE உத்தரவிட்டுள்ளது.

இந்த புதிய விதிமுறை தற்போது 10–ம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு பொருந்தாது. தற்போது 9–ம் வகுப்பு படித்து, அடுத்த கல்வியாண்டில் 10–ம் வகுப்புக்கு செல்லும் மாணவர்களுக்கே இது அமலாகும். மேலும், மாணவர்கள் கற்கும் மூன்று மொழிகளில் குறைந்தது இரண்டு மொழிகள் இந்திய மொழிகளாக இருக்க வேண்டும் என்பதும் புதிய விதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசு கல்லூரி பணியாளர்கள்: இடமாறுதலுக்கு விண்ணப்பம்

அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கான (டி பிரிவு ஊழியர்கள் தவிர) பொது இடமாறுதல் கலந்தாய்வுக்கு இன்று (ஜூலை 15) முதல் ஜூலை 24 வரை ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் www.nonteaching.dcetransfer.in இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என உயர் கல்வித்துறை அமைச்சர் பி. விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

# 9.87% ஆக உயர்ந்த மொத்த விலை பணவீக்கம்! விலைவாசி மேலும் உயருமா?




புதுடெல்லி, ஜூலை. 15–

இந்தியாவில் மொத்த விலை பணவீக்கம் (WPI) ஜூன் மாதத்தில் 9.87 சதவீதமாக உயர்ந்துள்ளதாக வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மே மாதத்தில் இது 9.68 சதவீதமாக இருந்த நிலையில், தற்போது மேலும் அதிகரித்துள்ளது. உணவுப் பொருட்களின் விலை உயர்வு மற்றும் உற்பத்திச் செலவு அதிகரிப்பே இதற்கு முக்கிய காரணமாக கூறப்படுகிறது.

மொத்த விலை பணவீக்கம் உயர்வது, எதிர்காலத்தில் சில்லறை விலைகளும் அதிகரிக்கும் சாத்தியத்தை காட்டுகிறது. குறிப்பாக தக்காளி, வெங்காயம் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வு, உணவுப் பொருட்களுக்கான பணவீக்கத்தை 4.49 சதவீதத்திலிருந்து 6.14 சதவீதமாக உயர்த்தியுள்ளது.

எரிபொருள் மற்றும் எரிசக்தி பிரிவில் பணவீக்கம் ஓரளவு குறைந்திருந்தாலும், மொத்த விலை உயர்வு தொடர்வதால் அத்தியாவசிய பொருட்களின் விலையில் மேலும் ஏற்றம் ஏற்படலாம் என்ற அச்சம் நிலவுகிறது. இதனால் நடுத்தர மற்றும் சாமானிய மக்களின் குடும்பச் செலவுகள் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாக பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.




திருப்பூர் 15 வேலம்பாளையம் அரசு மருத்துவமனையின் தவறான சிகிச்சையால் உயிரிழந்த ஹரிஷ்க்கு நீதி கேட்டும் மருத்துவமனை முன்பு அனைத்து அரசியல் கட்சி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது மேலும் இனிவரும் காலங்களில் இதுபோன்ற அசம்பாவிதம் நடக்காமல் மருத்துவர்கள் மருத்துவமனைக்கு வரும் மக்களை பாதுகாக்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.



அம்மா மக்கள் முன்னேற்ற கழக திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் இறை ஆர் வெங்கடேஷ் அவர்களிடம் வாலிபாளையம் பகுதிச் செயலாளர் விமலா அவர்கள் தலைமையில் 34வது வார்டு செயலாளர் ரீட்டா மேரி ;35 வது வார்டு செயலாளர் வெரோனிகா 36வது வார்டு செயலாளர் அம்ரோஸ் 37வது வார்டு செயலாளர் ஜெயராஜ் அவர்கள் வாலிபாளையம் முதல் பகுதியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் மாவட்ட செயலாளரை நேரில் சந்திதனர்.



பழனி அருகே கருப்பனகவுண்டர் வலசு கிராமத்தில் கே.ரவிமனோகரன் எம் எல் ஏ பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தும், வாக்காளர்களுக்கு நன்றியும் கூறினார். அருகினில் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் அன்வர்தீன், கிழக்கு ஒன்றிய செயலாளர் நடராஜன் உள்ளனர்.



இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், காரான் கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# பழனி கோவிலில் காஞ்சி சங்கராச்சாரியார் விஜேந்திர சரஸ்வதி சுவாமிகள் தரிசனம்!



பழனி ஜூலை 15–

காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரியார் விஜேந்திர சரஸ்வதி சாமிகள் நேற்று பழனிக்கு வருகை புரிந்தார். அவருக்கு தமிழ்நாடு பிராமண சங்கம் சார்பில் மாநிலத் தலைவர் என் ஹரிஹரமுத்து தலைமையில் பூரண கும்ப மரியாதை வரவேற்பு அளிக்கப்பட்டது. தம்பி விஜயேந்திர சரஸ்வதி சாமிகள் பழனி முருகன் மலைக்கோயில் சென்று கால பூஜைகளில் கலந்து கொண்டு முருகப் பெருமானை தரிசனம் செய்தார். பின்பு பழனி அடிவாரம் தனியார் மடத்தில் நடைபெற்ற ஆன்மிக நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று பக்தர்களுக்கு அருள் ஆசியும் சொற்பொழிவும் வழங்கினார்

## காட்டன் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா (CCI) 148 நிரந்தர பணியிடங்கள்!

அமைப்பின் பெயர்: The Cotton Corporation of India Ltd (CCI)
அறிவிப்பு எண்: DR/CCI/2026
வேலை வகை: மத்திய அரசு வேலை
பணி வகை: நிரந்தரம் (Regular Basis)
மொத்த காலியிடங்கள்: 148
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பம் தொடங்கும் தேதி: 09.07.2026 காலை 10.00 மணி
விண்ணப்பிக்க கடைசி தேதி: 24.07.2026 இரவு 11.55 மணி
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://cotcorp.org.in/

காலியிடங்கள்
Assistant Manager (Official Language) 01
Assistant Manager (Information Technology) 01
Management Trainee (Marketing) 08
Management Trainee (Accounts) 08
Junior Commercial Executive 50
Junior Assistant (Accounts) 50
Junior Assistant (General) 30

கல்வித் தகுதி
MBA (Agri Business/Marketing)
CA / CMA
B.Sc. (Agriculture)
B.Com
Diploma
BE / B.Tech (IT)
முதுகலைப் பட்டம் (Official Language தொடர்பான தகுதி) உள்ளிட்ட கல்வித் தகுதிகள். முழு விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் பார்க்கவும்.

**விண்ணப்பிப்பது?**

1. CCI அதிகாரப்பூர்வ Website: https://cotcorp.org.in இணையதளத்திற்கு செல்லவும்.

## தேசிய சுகாதார இயக்கம் (NHM) சென்னை: 27 காலியிடங்கள்!

அமைப்பின் பெயர்: National Health Mission (NHM), தமிழ்நாடு
பணி வகை: தற்காலிக பணி (Temporary Basis)
மொத்த காலியிடங்கள்: 27
பணியிடம்: சென்னை, தமிழ்நாடு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பம் தொடங்கிய தேதி: 23.06.2026. – கடைசி தேதி: 23.07.2026
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://nhm.tn.gov.in/

காலியிட விவரங்கள்
Chief Advisor 01
Advisor Digital Health & Analytics 01
Advisor Health Programmes & Innovations 01
Advisor Health Systems Strengthening 01
Advisor Knowledge Management & Development 01
Consultant Information Technology 01
Consultant Health Technology Assessment 01
Consultant 08
Intern 12

**கல்வித் தகுதி**

MBBS, MPH / MHA / MSW
Public Health / Community Medicine / Health Manage–ment / Public Policy / Epidemiology தொடர்பான முதுநிலை பட்டம்
BE / B.Tech (IT/CSE), MCA, M.Tech
Data Science / Health Informatics உள்ளிட்ட தொடர்புடைய துறைகளில் தகுதி மற்றும் அனுபவம்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. NHM தமிழ்நாடு அதிகாரப்பூர்வ இணையதளத்தில் https://nhm.tn.gov.in/ 23.07.2026–க்குள் ஆன்லைனில் சமர்ப்பிக்கவும்.

# வேலை வாய்ப்பு

## ISRO ISTRAC ஆட்சேர்ப்பு 2026: 26 பணியிடங்கள்!

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO)–இன் ISRO Telemetry, Tracking and Command Network (IS–TRAC)–ல் பல்வேறு தொழில்நுட்ப மற்றும் ஆதரவு பணிகளுக்கு 26 காலிப்பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆன்லைன் விண்ணப்பங்கள் 27.06.2026 காலை 10.00 மணி முதல் தொடங்கி, 20.07.2026 இரவு 11.55 மணி வரைபெறப்படும்.

**முக்கிய விவரங்கள்**

நிறுவனம்: ISRO ISTRAC
அறிவிப்பு எண்: ISTRAC:02:2026
வேலை வகை: மத்திய அரசு நிரந்தர பணி
பணியிடம்: பெங்களூரு
காலிப்பணியிடங்கள்: 26

காலிப்பணியிடங்கள்
Technician–B (Electronics Mechanic)
Technician–B (Carpenter)
Draughtsman–B (Civil)
Draughtsman–B (Mechanical)
Technical Assistant (Electronics)
Technical Assistant (Mechanical)
Scientific Assistant (Computer Science)
Scientific Assistant (Mathematics)
Library Assistant 'A'
Cook 'A'

முக்கிய தேதிகள்
ஆன்லைன் விண்ணப்பம் தொடக்கம்: 27.06.2026 காலை 10.00 மணி
கடைசி தேதி: 20.07.2026 இரவு 11.55 மணி
அதிகாரப்பூர்வ இணையதளம்
ISRO அதிகாரப்பூர்வ இணையதளம்
ISTRAC Recruitment Apply Online

## TNWeSafe Recruitment சென்னை வேலைவாய்ப்பு அறிவிப்பு!

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படும் தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம் (TNWe–Safe)சார்பில் ஒப்பந்த அடிப்படையில் 4 பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க விரும்பும் தகுதியானவர்கள் 31.07.2026–க்குள் ஆஃப்லைன் முறையில் விண்ணப்பிக்கலாம்.

**முக்கிய விவரங்கள்**

நிறுவனம்: Tamil Nadu Women Employment and Safety Project (TNWeSafe)
அறிவிப்பு எண்: 002/Admin/2024
வேலை வகை: தமிழ்நாடு அரசு ஒப்பந்தப் பணி
பணியிடம்: சென்னை
மொத்த காலியிடங்கள்: 04
விண்ணப்ப தொடக்க தேதி: 10.07.2026
கடைசி தேதி: 31.07.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

காலியிடங்கள்
Administrative Officer 01
PC to Project Director 01
Office Assistant 02

**கல்வித் தகுதி**

Administrative Officer: Bachelor's / Master's Degree, தொடர்புடைய துறையில் 3 ஆண்டுகள் அனுபவம், கணினி அறிவு.
PC to Project Director: ஏதேனும் பட்டப்படிப்பு, 2 ஆண்டுகள் அனுபவம், கணினி அறிவு.
Office Assistant: 10ஆம் வகுப்பு தேர்ச்சி.

**விண்ணப்பிக்கும் முறை**

அதிகாரப்பூர்வ இணையதளத்தில் https://www.tnwesafe.org இருந்து விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து, தேவையான சான்றிதழ்களின் நகல்களுடன் பூர்த்தி செய்து 31.07.2026–க்குள் தபால் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும்.

அதிகாரப்பூர்வ இணையதளம்: TNWeSafe Official Website

## GIRH&FWT திண்டுக்கல் ஆட்சேர்ப்பு 2026: 6 பணியிடங்கள்!

அமைப்பின் பெயர்: Gandhigram Institute of Rural Health & Family Welfare Trust (GIRH&FWT), திண்டுக்கல்
அறிவிப்பு எண்: GIRH/ESTT/01/0011/2026–2027 (20.06.2026)
வேலை வகை: மத்திய அரசு சார்ந்த நிறுவனம்
பணியிடம் வகை: நிரந்தரம் / குறிப்பிட்ட கால ஒப்பந்தம்
மொத்த காலியிடங்கள்: 06
பணியிடம்: திண்டுக்கல்
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன் –
விண்ணப்ப தொடக்க தேதி: 20.06.2026. – கடைசி தேதி: 19.07.2026
அதிகாரப்பூர்வ இணையதளம்: GIRH&FWT அதிகாரப்பூர்வ இணையதளம் :https://girhfwt.org

காலியிடங்கள்
Teaching Assistant I / Lecturer in Bio–Statistics 01
Teaching Assistant II 01
Librarian 01
Projectionist / Project Coordinator 01
Steno Typist 01
Upper Division Clerk / Junior Accountant 01

கல்வித் தகுதி
பணிக்கு ஏற்ப Any Degree, B.Com, M.Com, B.L.I.Sc./M.L.I.Sc., M.Sc., M.A., MPH, Ph.D., Civil/Electrical Engi–neering உள்ளிட்ட தகுதிகள் மற்றும் அனுபவம் அவசியம்.


விண்ணப்பிக்க வேண்டிய முகவரி
The Director,
The Gandhigram Institute of Rural Health and Family Welfare Trust,
Soundram Nagar, Ambathurai RS.,
Gandhigram (P.O),
Dindigul District 624302, Tamil Nadu.

குறிப்பு: அதிகாரப்பூர்வ விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து, தேவையான ஆவணங்களுடன் 19.07.2026மாலை 5.15 மணிக்குள் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

## இன்றைய கார்ட்டூன்




# புதுப்பொலிவு பெற்ற 75 ரெயில் நிலையங்கள் : ஜூலை. 17-ல் திறந்து வைக்கிறார் பிரதமர் மோடி!!





புதுடெல்லி, ஜூலை. 15–

மத்திய அரசின் 'அம்ரித் பாரத் ரெயில் நிலையத் திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் அதிநவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்ட 75 ரெயில் நிலையங்களை நாளை மறுநாள் பிரதமர் நரேந்திர மோடி காணொளி வாயிலாக நாட்டுக்கு அர்ப்பணிக்க உள்ளார்.

இந்திய ரெயில்வே துறையை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தும் நோக்கில் இந்த மெகா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் முதற்கட்டப் பணிகள் நிறைவடைந்த நிலையில், அடுத்தகட்டமாக புதுப்பிக்கப்பட்ட 75 நிலையங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு வரவுள்ளன.

**தமிழகத்தில் முக்கிய நிலையங்கள் திறப்பு:**

இந்த 75 ரெயில் நிலையங்களின் பட்டியலில் தமிழகத்தைச் சேர்ந்த முக்கிய ரெயில் நிலையங்களும் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, சென்னை பூங்கா, சின்ன சேலம், குன்னூர் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள ரெயில் நிலையங்கள் முற்றிலும் புதுப்பொலிவுடன் மாற்றியமைக்கப்பட்டு, திறக்கப்பட உள்ளன.

**உலகத்தரம் வாய்ந்த மாற்றங்கள்:**

பயணிகளின் வசதியை மேம்படுத்தவும், அடுத்த 40 முதல் 50 ஆண்டுகால தேவையை நிறைவு செய்யும் வகையிலும் இந்த நிலையங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**நவீன உள்கட்டமைப்பு:**

சர்வதேச தரத்திலான சொகுசு இருக்கைகள், நவீனக் காற்றோட்ட வசதியுடன் கூடிய விசாலமான காத்திருப்புக் கூடங்கள் மற்றும் நவீன கழிப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**மின்படிக்கட்டுகள் மற்றும் மின்தூக்கிகள்:**

முதியவர்கள் மற்றும் நோயாளிகளின் நலனைக் கருதி புதிய எஸ்கலேட்டர்கள் மற்றும் லிப்ட் வசதிகள் தாராளமாக நிறுவப்பட்டுள்ளன.

**மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள்:**

மாற்றுத்திறனாளிகள் எளிதாகப் பயணிக்கும் வகையில் பிரத்யேக சாய்தளப் பாதைகள், பிரெய்லி வழித்தடங்கள் மற்றும் சிறப்பு கழிப்பறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**அகலமான மேம்பாலங்கள்:**

முன்பு 4.5 மீட்டராக இருந்த நடைமேடை மேம்பாலங்கள், பயணிகளின் பாதுகாப்பான நடமாட்டத்திற்காக 12 மீட்டர் வரை அகலப்படுத்தப்பட்டுள்ளன.

**உள்ளூர் கலாச்சாரப் பிரதிபலிப்பு:**

ரெயில் நிலையங்களின் முகப்புகள் மற்றும் உட்புறச் சுவர்கள் அந்தந்தப் பகுதியின் பாரம்பரியக் கலை மற்றும் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

**நகர மையங்களாக மாற்றம்:**

ரெயில் நிலைய வளாகங்கள் வெறும் பயண இடமாக மட்டுமில்லாமல், வணிக வளாகங்கள், உணவகங்கள் மற்றும் வாகன நிறுத்துமிடங்களுடன் கூடிய 'சிட்டி சென்டர்களாக' மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

**உத்வேகம் பெறும் இந்திய ரெயில்வே:**

மத்திய அரசு நாடு முழுவதும் சுமார் 3,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு மாநிலங்களில் உள்ள ரெயில் நிலையங்களை அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் மறுசீரமைப்பு செய்து வருகிறது.

ரெயில்வே துறையின் இந்த அசுர வேக நவீனமயமாக்கல், நாட்டின் உள்கட்டமைப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜூலை. 17–ல் நடைபெறும் இந்த பிரம்மாண்ட திறப்பு விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் இந்திய ரெயில்வே தீவிரமாகச் செய்து வருகிறது.

# இந்தியா - இங்கிலாந்து வர்த்தக ஒப்பந்தம் அமல்!



புதுடெல்லி, ஜூலை. 15–

இந்தியா மற்றும் இங்கிலாந்து இடையேயான விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் இன்று (புதன்கிழமை) முதல் நடைமுறைக்கு வருகிறது. 2030–ம் ஆண்டுக்குள் இருதரப்பு வர்த்தகத்தை ரூ.11½ லட்சம் கோடி (120 பில்லியன் டாலர்) ஆக இரட்டிப்பாக்குவதை இந்த ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**வர்த்தக ஒப்பந்தம்**

இங்கிலாந்திற்கு ஏற்றுமதியாகும் 99 சதவீதப் பொருட்கள் மீதான சுங்கவரி முழுமையாக நீக்கப்படுகின்றன. இதனால் இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் சுமார் ரூ.60 ஆயிரம் கோடி அளவுக்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வர்த்தகம், முதலீடு மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பு மேலும் விரிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் ஜவுளித் துறை, ரத்தினங்கள் மற்றும் நகைகள், மருந்துத் துறை, வாகனங்கள் மற்றும் வாகன உதிரிபாகங்கள் போன்ற முக்கிய துறைகளுக்கு பெரும் நன்மைகளை வழங்கும் எனக் கருதப்படுகிறது. மேலும், இந்திய நுகர்வோர் இங்கிலாந்தில் தயாரிக்கப்படும் கார்கள் மற்றும் விஸ்கியை குறைந்த விலையில் பெறும் வாய்ப்பும் உருவாகலாம். அதேசமயம், சமையல் கலைஞர்கள், யோகா பயிற்சியாளர்கள் போன்ற தொழில்முறை நிபுணர்கள் எளிதான பயண வசதிகள் மற்றும் விசா சலுகைகளால் பயன் பெறலாம்.

**முக்கிய அம்சங்கள் என்னென்ன...?**

இந்த ஒப்பந்தத்தின்படி, இங்கிலாந்து விதிக்கும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் மீதான 70 சதவீதம் வரையிலான வரிகள், கடல்சார் பொருட்கள் மீதான 21 சதவீதத்துக்கும் அதிகமான வரிகள், பொறி யியல் பொருட்கள் மற்றும் வாகன உதிரிபாகங்கள் மீதான 18 சதவீத வரிகள், தோல் மற்றும் காலணி தயாரிப்புகள் மீதான 16 சதவீதம் வரையிலான வரிகள் மற்றும் ஜவுளி வகைகள் மீதான சுமார் 12 சதவீத வரிகள் ஆகியவை பூஜ்ஜியமாக குறைக்கப்படும். இது இங்கிலாந்து சந்தையில் இந்திய ஏற்றுமதிகளை கணிசமாக அதிகரிக்கும்.

இந்த ஒப்பந்தத்தின்படி, இரு நாடுகளுக்கும் இடையேயான வாகன இறக்குமதி வரி குறிப்பிட்ட ஒதுக்கீடுகளின் கீழ் தற்போதுள்ள சுமார் 110–லிருந்து 10 சதவீதம் ஆகக் குறைக்கப்படும். முதல் 15 ஆண்டுகளில் 3.78 லட்சம் யூனிட்டுகள் வரையிலான வழக்கமான இன் ஜின் கொண்ட இங்கிலாந்தின் பயணிகள் கார்களை (வெகுஜன சந்தை மாடல்கள் உட்பட) சலுகை வரியில் இறக்குமதி செய்ய இந்தியா அனுமதிக்கும்.

இதுபோல 20,000 முதல் 80,000 பவுண்டு வரையிலான விலை வரம்பில் உள்ள இந்திய மின்சார, ஹைபிரிட் மற்றும் ஹைட்ரஜன் பயணிகள் கார்களுக்கு, 6–வது ஆண்டிலிருந்து வரி இல்லாத ஏற்றுமதி வாய்ப்பு கிடைக்கும். இதன் மொத்த ஒதுக்கீடு 15–வது ஆண்டில் 88,000 யூனிட்டுகளாக உயர்ந்து, அடுத்தடுத்த ஆண்டுகளிலும் தொடரும்.

இது டாடா மோட்டார்ஸ், மஹிந்திரா & மஹிந்திரா மற்றும் மாருதி சுசூகி போன்ற இந்திய உற்பத்தியாளர்களுக்கு பெரும் பயனளிக்கும். அதேநேரம், உள்நாட்டு வெகுஜன சந்தை மின்சார வாகன பிரிவைப் பாதுகாக்க இந்தியா சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. 14 சுற்றுகளாக நடைபெற்ற தீவிர பேச்சு வார்த்தைகளுக்கு பிறகு இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஆவின் பால் கொள்முதலை அதிகரிக்க முதலமைச்சர் விஜய் உத்தரவு!



சென்னை, ஜூலை. 15–

தமிழ்நாடு அரசின் 2026–27ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை தாக்கல் இம்மாத இறுதி அல்லது ஆகஸ்ட் முதல் வாரத்தில் இருக்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், அறிக்கையில் இடம்பெறவுள்ள முக்கிய அறிவிப்புகள் மற்றும் திட்டங்களை இறுதி செய்வதற்காக, துறைவாரியாக முதலமைச்சர் விஜய் ஆலோசனைக் கூட்டங்களை நடத்திவருகிறார்.

ஒவ்வொரு துறையின் தற்போதைய செயல்பாடுகள், புதிய திட்டங்கள், அரசின் இலக்குகள், சேவை வழங்குதலில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றங்கள், வெளிப்படைத்தன்மை, நிர்வாகச் செயல்திறன் ஆகியவை குறித்து விரிவாக ஆய்வு செய்யப்படுகின்றன.

இதன் ஒருபகுதியாக பால்வளத்துறை தொடர்பாக ஆவின் பால் உற்பத்தி குறைவு, கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் மீன்வளத்துறை தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

# வாக்காளர்களுக்கு பிரிட்ஜ் கூப்பன் - சி.விஜயபாஸ்கருக்கு நோட்டீஸ்!



சென்னை, ஜூலை. 15–

நடந்த முடிந்த தமிழக சட்டசபை தேர்தலில் புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை தொகுதியில் அதிமுக வேட்பாளராக போட்டியிட்ட சி.விஜயபாஸ்கர், 1,05,773 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட தவெக வேட்பாளர் முருகேசனை விட 62,073 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார்.

இதனையடுத்து சி.விஜயபாஸ்கர் வெற்றி பெற்றதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் திமுக சார்பில் போட்டியிட்டு தோல்வியுற்ற கே.கே. செல்லப்பாண்டியன் தேர்தல் வழக்கு தொடர்ந்தார். அதில், வெற்றி பெற்ற சி.விஜயபாஸ்கர் தேர்தல் பிரச்சாரத்தின்போது வாக்காளர்கள் தனக்கு ஆதரவாக வாக்களிக்க கூறி ரூ.10,000 மற்றும் ரூ.2,000–க்கான கூப்பன்களை விநியோகித்தார். வாக்காளர்கள் ப்ரிட்ஜ் வாங்க கூப்பன்களை விநியோகித்து தேர்தல் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளார். எனவே சி.விஜயபாஸ்கர் வெற்றியை செல்லாது என அறிவிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி என் செந்தில்குமார் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது வழக்கு விசாரணைக்கு ஏற்றுக்கொண்டு கூப்பன்களை வழங்கி முறைகேட்டில் ஈடுபட்டதை மனுதாரர் சுட்டிக்காட்டி பதிவு செய்தார். மேலும் வழக்கு குறித்து சி.விஜயபாஸ்கர் மற்றும் தேர்தல் ஆணையம் பதிலளிக்குமாறு உத்தரவிட்டு வழக்கு விசாரணையை மூன்று வாரத்திற்கு தள்ளி வைத்தார். தற்பொழுது சி.விஜயபாஸ்கர் தன்னுடைய எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்து விட்டு தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிமுக - திமுக கூட்டணி என கட்டுக்கதை அவிழ்த்து விட்டுள்ளனர்: பழனிசாமி ஆவேசம்!



சேலம், ஜூலை. 15–

"அ.தி.மு.க., –தி.மு.க., கூட்டணி என, கட்டுக்கதையை அவிழ்த்து விட்டுள்ளனர்," என, அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி ஆவேசமாக தெரிவித்துள்ளார். சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே, அ.தி.மு.க., அலுவலகத்தில், கட்சி நிர்வாகிகளுடன் பழனிசாமி ஆலோசனை நடத்தினார். பின், அவர் அளித்த பேட்டி:

தமிழகத்தில், தூய ஆட்சி நடக்கிறதா என தெரியவில்லை. குற்றம் செய்தவர்கள், ஆளுங்கட்சியில் இணைகின்றனர். இரவல் வாங்கி ஆட்சி நடத்துகிறார், முதல்வர் விஜய். தேர்தல் நேரத்தில், 'திராவிட கட்சிகள் சரியில்லை' என்றார். ஒரு திராவிட கட்சியின் கூட்டணியில் இருந்த கட்சிகள் தான், த.வெ.க., ஆட்சி நடத்த, துணையாக உள்ளன.

அ.தி.மு.க., – தி.மு.க., கூட்டணி என்ற கட்டுக்கதையை அவிழ்த்து விட்டுள்ளனர். நான், தீய சக்தி தி.மு.க., செய்த குற்றங்களை தொடர்ந்து பேசி வருகிறேன். எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோதும், தி.மு.க., தவறை சுட்டிக்காட்டினேன். அ.தி.மு.க., தலைமை ஆதிக்கம் செலுத்துவதாக, கட்சியில் இருந்து வெளியேறியவர்கள் கூறுகின்றனர்.

அவர்கள் வெற்றி பெறும் முன், அந்த ஆதிக்கம் தெரியவில்லையா? அ.தி.மு.க., அழிந்து விட்டதாக, தமிழக காங்., தலைவர் மாணிக்கம் தாகூர் கூறுகிறார். ஆனால், காங்., எங்கே இருக்கிறது; காங்., நிலைமை பரிதாபமாக உள்ளது.

த.வெ.க., அரசு, மேகதாது அணைக்கு எதிராக சட்டசபையில் தனி தீர்மானம் கொண்டுவந்து, அதில் நடுவர் மன்றம் அமைப்பதாக அறிவித்து, டெல்டா விவசாயிகள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

த.வெ.க., ஆரம்பித்து, 2 ஆண்டு தான் ஆகிறது. விவசாயிகளின் கஷ்டம் அவர்களுக்கு தெரியாது. அ.தி.மு.க., – தி.மு.க., ஆட்சிகளில், திறமையானவர்களை ஆலோசகர்களாக நியமிப்பது வழக்கம். இப்போது, விஜய்க்கு உதவி செய்தவர்களை ஆலோசகர்களாக நியமிக்கின்றனர். விரைவில் அவரது மேக்கப் மேனுக்கும் ஏதாவது பதவி கொடுப்பார். இவ்வாறு அவர் கூறினார்.

# லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் எ.வ.வேலு ஆஜர்!



சென்னை, ஜூலை. 15–

தி.மு.க. முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு மீது நெடுஞ்சாலை துறையில் ரூ.3.23 கோடி முறைகேடு நடந்ததாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இந்த வழக்கு தொடர்பாக கடந்த 3–ந் தேதி லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்தில் ஆஜராக உத்தரவிடப்பட்டு இருந்தது.

ஆனால் சிங்கப்பூர் சென்றிருந்த எ.வ.வேலு, அங்கு உடல் நலக்குறைவால் சிகிச்சை பெற்றுவந்தார். அவருக்கு எதிராக 'லுக் அவுட்' நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது. ஆனால் சென்னை ஐகோர்ட்டு, நிபந்தனையுடன் இடைக்கால தடை விதித்துள்ளதுடன், 15–ந்தேதி லஞ்ச ஒழிப்புத்துறை முன்பு ஆஜராகவும் உத்தரவிட்டது.

இந்த நிலையில், ஐகோர்ட்டு உத்தரவின்படி, சென்னை ஆலந்தூரில் உள்ள லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்தில் திமுக முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு இன்றும் ஆஜராகியுள்ளார். அவரிடம் லஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரசு கலைக்கல்லூரிகளில் ஆசிரியரல்லா பணியாளர்களுக்கு பணியிட மாறுதல் கலந்தாய்வு தொடக்கம்!




சென்னை, ஜூலை. 15–

முதல்–அமைச்சரின் வழிகாட்டுதலின்படி, உயர்கல்வித்துறையின் கீழுள்ள கல்லூரிக்கல்வி இயக்ககம், அனைத்து மண்டல கல்லூரிக்கல்வி இணை இயக்ககங்கள், அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியரல்லா பணியாளர்களின் ('டி' பிரிவு தவிர்த்து) நலன்கருதி 2026–27–ம் ஆண்டு பணியிட மாறுதலுக்கான பொதுகலந்தாய்வு நடத்த ஆணையிடப்பட்டு உள்ளது. அதன்படி, உயர்கல்வித்துறையின்கீழ் இயங்கும் கல்லூரிக்கல்வி இயக்ககம், அனைத்து மண்டல கல்லூரிக்கல்வி இணை இயக்ககங்கள், அரசு கலை, அறி வியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியரல்லா பணியாளர் கள் 'டி' பிரிவு தவிர்த்து) 2026–27–ம் ஆண்டு பணியிட மாறுதலுக்கான பொது இடமாறுதல் கலந்தாய்வுக்கு 15–ந்தேதி முதல் 24–ந்தேதி வரை இணையவழி வாயிலாக விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த பொது கலந்தாய்வில் கலந்துகொள்ள ஆசிரியரல்லாப் பணியாளர்கள் ('டி'பிரிவு தவிர்த்து) www.nonteaching.dcetransfer.in என்ற இணையதள முகவரியில், விண்ணப்பித்து பயன்பெற வேண்டும்.

மேற்கண்ட தகவல் உயர்கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கர்நாடக எல்லையில் கன்னட அமைப்புகள் போராட்டம்: கர்நாடகா செல்லும் தமிழ்நாடு பேருந்துகள் நிறுத்தம்!

கர்நாடகா, ஜூலை. 15–

தமிழ்நாடு – கர்நாடக எல்லையில் கன்னட அமைப்புகள் எல்லை அடைப்பு போராட்டம் நடத்துவதால், தமிழ்நாட்டில் இருந்து கர்நாடகா செல்லும் பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளது. ஒசூரில் பேருந்துகள் இன்றி மக்கள் பாதிக்கப்படுகின்றனர். மேகதாது அணை கட்ட எதிர்க்கும் தமிழ்நாடு அரசைக் கண்டித்து கன்னட ஒக்கூடா கூட்டமைப்பு தலைவர் வாட்டல் நாகராஜ் தலைமையில் அத்திப்பள்ளியில் எல்லை அடைப்பு பந்த் போராட்டம் நடைபெற்று வருகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020